**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 134/2023**
**Dated :02.12.2025**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னராஜா | வயது | : | 26 |
| தந்தை பெயர் | : | முத்துவேல் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | சேவியர்குடிகாடு | தொழில் | : | கேண்டின் வேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Accused absent. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)
**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**
**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து, சென்னையில் தனியார் கேண்டினில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்து போன மணிமாறன் எனது அண்ணன் ஆவார். கடந்த 24.03.2023 ஆம் தேதி, எனது அண்ணன் மணிமாறன் மதியம் சுமார் 03.20 மணியளவில் TN 55 BE 1402 என்ற பதிவெண் கொண்ட Pulsar இருசக்கர வாகனத்தில் கடைக்கு சென்றிருந்தார். சுமார் 03.30 மணியளவில், சிவானந்தம் என்பவர் எனக்கு போன் செய்து, ராஜமாணிக்கம் வீட்டின் அருகே, அசோக்லைலேண்ட் லாரி மோதி எனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். நான் அப்போது, தஞ்சாவூரில் இருந்து வேலை முடித்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தேன், நான் நேரடியாக சம்பவ இடம் சென்று பார்த்த போது, லாரியின் முன்பக்கம் இடதுபக்க டயர் என் அண்ணனின் தலையில் ஏறி, இறங்கி இருந்தது. எனது அண்ணனின் கால் இடது பக்க லாரியின் பட்டையில் மாட்டியிருந்தது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக இறந்து போன எனது அண்ணனை புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லலூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அந்த லாரியின் பதிவெண் TN 28 BB 1161 ஆகும். அந்த லாரியை ஓட்டிவந்த ஓட்டுநர் செல்லப்பா என்று போலிசார் சொல்லி தெரிந்து கொண்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் மனு நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இறந்து போன என் அண்ணனின்

பிரேதத்தின் மீது போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள், நானும் உடனிருந்தேன், என்னையும் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) லாரியின் ஓட்டுநர் செல்லப்பா என்பதை போலிசார் சொல்லி தெரிந்து கொண்டதாக நான் புகார் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒப்பம்.நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 134/2023**
**Dated :02.12.2025**
**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW3 Examined as PW2(Eye Witness )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெங்கராஜ் | வயது | : | 46 |
| தந்தை பெயர் | : | ராசு | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | சேவியர்குடிகாடு | தொழில் | : | கூலிவேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Accused absent. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 2021 ஆம் ஆண்டு, மாலை சுமார் 03.30 மணியளவில், நான் வேலைக்கு சென்றுவிட்டு, சேவியர்குடிகாட்டில் உள்ள சுடுகாட்டிற்கு செல்லும் சாலை வழியாக நான் நடந்து வீட்டிற்கு செல்வதற்காக தஞ்சாவூர்-கறம்பக்குடி சாலையை நோக்கி சென்று கொண்டிருந்த போது, தஞ்சாவூரிலிருந்து கறம்பக்குடி நோக்கி வந்த டிப்பர் லாரி அதிவேகமாகவும் அதிக எடையுடனும் வந்து, முன்னால் சென்று கொண்டிருந்த பல்சர் இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. மேற்படி இருசக்கர வாகனத்தில் சென்ற நபருக்கு தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். லாரியை ஓட்டி வந்த ஓட்டுநர் லாரியில் இருந்து இறங்கி ஓடிவிட்டார். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ( எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை, ஆஜரில் இருந்திருந்தால் சாட்சி அடையாளம் காட்டியிருப்பார். ) விபத்தில் இறந்த நபரை புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் மணிமாறன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது சித்தப்பா மகன் ஆவார். அ.சா.1 எனது சித்தப்பா மகன் ஆவார். வழக்கு சம்பவம் நடைபெற்ற தேதி, மாதம் எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். தஞ்சாவூர் -கறம்பக்குடி சாலைக்கு இணைப்பு சாலையாக உள்ள சாலையில் நான் நடந்து வந்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான், சுமார் 250 மீட்டர் தொலைவில் நான் நடந்து வந்துகொண்டிருந்தேன். நான் அவ்வாறு நடந்து வந்துகொண்டிருந்த போது, டமார் என சத்தம் கேட்டு, நான் அங்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி இணைப்பு சாலை மேற்கில் இருந்து, கிழக்கான ரோடு என்றால் சரிதான். தஞ்சாவூர் - கறம்பக்குடி சாலை தென்வடல் சாலை என்றால் சரிதான்.

மேற்படி இணைப்பு சாலையில் இருந்து தென்வடல் சாலையில், சுமார் 200 மீட்டர் தொலைவில், சம்பவம் நடந்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

2) நான் இருசக்கர வாகனத்தில் சென்ற போது, சம்பவத்தை பார்த்தாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் நடந்து வந்த இடத்தில் இருந்து, சம்பவ இடம் செல்வதற்குள் லாரியை ஓட்டிவந்ததாக சொல்லப்படும் ஓட்டுநர் லாரியில் இருந்து இறங்கி ஓடிவிட்டார் என்றால் ஓடிகொண்டிருந்தார், அவரை பிடித்திருக்கலாம், ஆனால் வயது குறைவான நபர் அடிபட்டு கிடந்ததால் அவரை பிடிக்கவில்லை. மேற்படி லாரியில் எத்தனை நபர்கள் இருந்தார்கள், யார் யார் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஒரு நபர் இருந்தார், அவர் தான் ஓட்டுநர் ஆவார், அவர் இறங்கி ஓடிவிட்டார். நான் சம்பவ இடம் சென்ற போது, நான் ஓட்டுநரை பார்க்கவில்லை என்றால் அவர் ஓடிக்கொண்டிருந்ததை பார்த்தேன், லாரியில் இருந்ததை பார்க்கவில்லை. நான் சென்ற போது, எதிரி எந்த திசை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார் என்றால் கிழக்கு திசை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார். எந்த தேதி, மாதம், வருடம், எந்த இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் என்னை தனிநபராக விசாரிக்கவில்லை, எல்லோரையும் விசாரிக்கும் போது விசாரித்தார்கள். போலிசார் அனைவரையும் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். நானும் சிவானந்தம் என்பவரும் சேவியர்குடிகாடு கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நானும் புகார்தாரரும் சேர்ந்து தான் வந்தோம் என்றால் இல்லை, நான் தனியாக வந்தேன், அவர் தனியாக வந்தார். நான் சின்னராஜாவும் சிவானந்தமும் சொன்னதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, என் மனசாட்சிப்படி சாட்சியளிக்கிறேன். இறந்து போன நபரும் புகார்தாரரும் எனது உறவினர் என்பதால் வழக்கு சம்பவம் பற்றி தெரியாமல் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒப்பம்.நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**